## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 23/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஏப்ரல் மாதம் **10** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 10.04.2024**

**பெயர் - ஹரிதாஸ்**

**த/பெ - தேவராஜ்**

**சாட்சி - PW1**

**வயது – 42**

**ஊர் – பள்ளிபாளையம் கிராமம்**

**தொழில் – விவசாயம்**

**விசாரணை தொடங்கும் நேரம்- 03.20 மாலை**

**முதல் விசாரணை -**

1. நான் இவ்வழக்கின் முதலாம் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்காக கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2- (01) மனைவரி தோராய பட்டா எண்.125 எனது தந்தையார் பெயரில் உள்ளதன் அசல் - **Ex.A1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(02) 09.05.2019 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண்1900/2019 என கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் சான்றிட்ட நகல் - **Ex.A2 ( மேற்படி ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என பிரதிவாதிகள் தரப்பில்**

**ஆட்சேபனை எழுப்பப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)**

(03) பட்டா எண்.197 எனது மனைவியான 2ம் வாதி கோமதி பெயரில் உள்ளது இதன் அசல் - **Ex.A3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(04) 23.09.1980 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண்1631/1980 என கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் சான்றிட்ட நகல் - **Ex.A4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( **மேற்படி ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)**

(5) 23.03.2022 தேதியிட்ட நான் வட்டாட்சியர் பொன்னேரி அவர்களுக்கு அளித்த மனுவின் கைநகல் மற்றும் அதற்கான அசல் அஞ்சல் ரசீது **Ex.A5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **( வரிசை 1 மற்றும் 2 ஆகும்)**

(06) 09.05.2019 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண்.1901/2019 என கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல் - **Ex.A6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(7) பட்டா எண்.4087 எனது பெயரில் உள்ளது கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **Ex.A7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(8) 5.9.2011 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண்3976/2011 என கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல் **Ex.A8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(9) பட்டா எண்.717 எனது தந்தையார் பெயரில் உள்ளது கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **Ex.A9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(10) பட்டா எண்.4088 எனது தந்தையார் பெயரில் உள்ளது கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **Ex.A10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(11) 11.04.2007 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண்.3181/2007 என கும்மிடிப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல் **Ex.A11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(12) அசல் வழக்கு 10/201-ல் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண்.1/21 -ல் இந்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவாணை சான்றிட்ட நகல் **Ex.A12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் இந்த உத்தரவு தாக்கல் செய்வதற்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**)

(13) 26.03.2022 தேதியிட்ட நான் வட்டாட்சியர் பொன்னேரி, வட்டார வளர்ச்சி அலுவலர், மீஞூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், சேலியம்பேடு ஊராட்சி மன்றம் ஆகியோருக்கு அனுப்பிய மனுவின் கைநகல் மற்றும் அதற்கான அஞ்சல் ரசீதுகள் 3 எண்ணிக்கைகள் **Ex.A13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**வரிசை 1 முதல் 4 ஆகும்.**)

(14) 21.03.2022 தேதியிட்ட நான் பொன்னேரி வட்டாட்சியர் அவர்களுக்கு தாவா சொத்தினை அளந்து அத்துகாட்ட கோரி கொடுத்த மனுவின் கைநகல் மற்றும் அதற்கான ஒப்புகை சீட்டு கணினி வழி எடுக்கப்பட்டது. **Ex.A14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**வரிசை 1 முதல் 2 ஆகும்.**)

(15) 23.03.2022 தேதியிட்ட நான் கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் கைநகல் **Ex.A15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**மேற்படி புகார் காவல் நிலையத்தில் சமர்ப்பித்தற்கு சி.எஸ்.ஆர். ரசீது தாக்கல் செய்யப்படவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**)

(16) 26.03.2022 தேதியிட்ட நான் தமிழக முதல்வர், காவல் துறை துணைதலைவர் காஞ்சிபுரம் வடக்கு சரகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அளித்த புகாரின் கைநகல் மற்றும் அதற்கான அசல் அஞ்சல் ரசீதுகள் 4 எண்ணிக்கைகள் **Ex.A16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**வரிசை 1 முதல் 5 ஆகும்.**) **மேற்படி ஆவணம் அசல் வழக்கு 10/2021க்கு சம்பந்தப்பட்டது என பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**)

(17) 24.03.2022 தேதியிட்ட எனது மனைவி காவல் உதவி ஆய்வாளர் கும்மிடிப்பூண்டி

காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் கைநகல் **Ex.A17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(மேற்படி புகார் காவல் நிலையத்தில் சமர்ப்பித்தற்கு சி.எஸ்.ஆர். ரசீது தாக்கல் செய்யப்படவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)**

(18) 26.03.2022 தேதியிட்ட எனது மனைவி தமிழக முதல்வர், காவல் துறை துணைத்தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அளித்த புகாரின் கைநகல் மற்றும் அதற்கான அசல் அஞ்சல் ரசீதுகள் 4 எண்ணிக்கைகள் **Ex.A18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வரிசை எண் 1 முதல் 5 ஆகும்.)**

(19) 28.03.2022 தேதியிட்ட நான் 5ம்பிரதிவாதிக்கு அனுப்பிய மனுவின் கைநகல் மற்றும் அதற்கான ஒப்புகை சீட்டு கணினி வழி எடுக்கப்பட்டது **Ex.A19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வரிசை எண் 1 மற்றும் 2 ஆகும்.)**

(20) 28.03.2022 தேதியிட்ட நான் நான் 5ம்பிரதிவாதிக்கு அனுப்பிய மனுவின் கைநகல் மற்றும் அதற்கான ஒப்புகை சீட்டு கணினி வழி எடுக்கப்பட்டது **Ex.A20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வரிசை எண் 1 மற்றும் 2 ஆகும்.)**

(21) 28.03.2022 தேதியிட்ட கணினிவழி பெறப்பட்ட அறிக்கை **Ex.A21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(22) 19.04.2022 தேதியிட்ட அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் **Ex.A22** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(23) தாவா சொத்து சம்பந்தமான புகைப்படங்கள் 3 எண்ணிக்கைகள் மற்றும் அவை அடங்கிய குறுந்தகடு 1 எண்ணிக்கை. **Ex.A23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வரிசை எண் 1 முதல் 4 ஆகும்.)**

(24) 18.08.2016 தேதியிட்ட எனது தந்தையார் தேவராஜ் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் **Ex.A24** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(25) 29.12.2017 தேதியிட்ட எனது தந்தையாரின் வாரிசு சான்றிதழ் அசல் **Ex.A25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).

விசாரணை முடியும் நேரம்- 04.15 மாலை.